ஸ்ரீ:
ஸ்ரீகோதாயை நம:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம: ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேஶிகாய நம:

ஸ்ரீ உ வே உருப்பட்டூர் ஸௌந்தரராஜசார்யர் ஸ்வாமியின் ஸ்வாபதேசம் பெறும் பாக்யத்தை கோதையாண்டாளின் ஸூக்தியும் பெற்றது; நாமும் பெற்றோம். திருப்பாவையின் ஐந்தாவது பாசுரமான "மாயனை மன்னு", இன்றையதினம் ஒரு பாஞ்சராத்ர திருவாராதனம் கண்டருளியது. பாஞ்சராத்ரம் என்றால் எம்பெருமான் தனது திருவாய் மலர்ந்து ஐந்து தினங்களில் அருளிய திருவாராதன க்ரமம் என்பதாகும். அதாவது எம்பெருமானை காயத்ரிமந்த்ரம், திருவஷ்டாக்ஷரம், த்வயம், சரமஶ்லோகம், கீதை ஆகியவற்றால் திருவாராதனம் செய்வது போன்றதொரு பாஞ்சராத்ர ஆகமம் என்று கருதலாம். இப்படியான ஒரு அநுஷ்டானயோகம் ஸ்ரீஉருப்பட்டூர் ஸ்வாமியின் உபன்யாஸ உபதேசமாய்க் கிடைக்கிறது. ஸ்வாமி இன்றைய தினம் அநுஷ்டானம் எந்த அளவுக்கு முக்கியம் என்பதை தெளிவாக எடுத்துரைத்து, இப்படிப்பட்ட அனுஷ்டானங்களால் எம்பெருமானை துதிக்க வேணும் என்ற உயர்ந்த தத்துவத்தை அருளியுள்ளார். இது கர்மயோகம் எனப்படும், ஜீவனுக்கு எம்பெருமானின் கட்டளையாயுள்ள கர்மங்கள். இந்த கர்மங்களை அநுஷ்டித்தால் எம்பெருமான் மிகவும் மகிழ்ச்சியடைந்து நமக்கு அருளுகிறான். இந்த கர்மங்களை அநுஷ்டிக்காவிட்டால் "அவனை நான் ஸ்மரிப்பதில்லை" என்று பகவான் கீதையில் சொல்கிறான். செய்யாமல் இருப்பது பகவதாஜ்ஞைக்கு விரோதமானது.

மற்றொரு ஸ்வாபதேசமானது பக்தியோகத்தை சார்ந்த விஷயம். பக்தியோகத்தை அநுஷ்டிப்பவனுக்கு அனைத்தும் பரம்பொருளே. துக்கமும் மகிழ்ச்சியும் ஒரே தன்மையில் பார்க்கும் பக்குவம் நிறைந்தவன். அனைத்தும் "அவன் செயல்" என்று அனைத்தையும் எம்பெருமானிடமே ஸமர்ப்பிப்பவன். உருப்பட்டூர் ஸ்வாமி மிக அழகாக இந்த திருப்பாவையின் 5ம் பாசுரத்தில் பக்தியோகத்தில் நம்மை எவ்வாறு ஆழ்த்துகிறார் என்று பார்ப்போம்.

தாய் எனப்படுப்படுவள் காயத்ரி மந்த்ரத்துக்கு ஸமமானவள். எம்பெருமானின் திருவருள் வேண்டுமானால் பிராட்டியான தாயின் அனுக்ரஹம் முதலில் வேணும். தாயின் கருணைதான் எம்பெருமானின் கோபத்தைத் தணித்து நமக்கு அருளுமாறு வகை செய்யும். எம்பெருமானை ஸாக்ஷாத்கரிக்க நாம் என்ன செய்ய வேண்டும்? தாயாரின் தயவுடன் எம்பெருமான் திருவடிகளின் தஞ்சமடைய வேண்டுமல்லவா?

கர்மாநுஷ்டமாக நாம் அநுதினமும் காயத்ரி மந்த்ரத்தை ஜபிக்க வேணும். மற்றைய மந்த்ரங்களும், வேத உபநிஷத் வாக்கியங்களும், ப்ரபந்தங்களும், ஆசார்ய ஸூக்திகளும் அவ்வாறேதான். இவற்றின் தயவுடன் நாம் எம்பெருமானை ஸ்தோத்ரம் செய்கிறோம். இந்த மந்த்ரங்கள் தாய் போன்று கருணையுடன் நம்மை எம்பெருமான் திருவடிகளில் சேர்க்கும் உபாயமாவதால், மந்த்ரங்கள் தாய் போன்றவை.

உபநயனமான பிறகுதான் மந்த்ரோபதேசம் பெற முடியும். உபநயனமானவுடன் முதலில் நமக்கு உபதேசிக்கப்படும் மந்த்ரமானது காயத்ரி என்ற உயர்ந்த மந்த்ரம்.

அந்த மந்த்ரம்தான் நமக்கு முதல் தாய் போன்றது. அந்த மந்த்ர ப்ரயோகம்தான் நம்மை முதலில் எம்பெருமான் திருவடிகளுக்கு ஸமீபமாக அழைத்து செல்கிறது. இப்படியாக பக்தி பெருக்கில் தேவகி அன்னை முதல் தாய் என போற்றப்படுகிறாள். தேவகி அன்னை முதல் தாய் என்பதால் காயத்ரி மந்ரத்துக்கு ஸமமானவன். தேவகி அன்னை நமக்கு முதன்முதலாக கண்ணனை ஈன்றெடுத்துக் காட்டித்தருகிறாள்.

பிறகு, ஸ்ரீவைஷ்ணவனாக வேண்டி ஸமாஶ்ரயணம் செய்துகொண்டு பகவத் கைங்கர்யத்துக்கு ஏற்றவனாகிறோம். அப்போது நமக்கு உபதேசம் செய்யப்படும் மந்த்ரமானது அஷ்டாக்ஷரம், த்வ்யம் போன்றவை. இந்த இரண்டு மந்த்ரங்களும் நமக்கு பகவத் கைங்கர்யத்திலும் பக்தி யோகத்திலும் செலுத்துபவை. எனவே இந்த மந்த்ரங்கள் நமக்கு இரண்டாவது தாய் போன்றது. நம்மை வளர்ப்பது. இப்படியாக இரண்டாவது தாயான யசோதை அஷ்டாக்ஷர மந்த்ரம்.

இந்த கர்மயோகமும் பக்தியோகமும் கடினமாக இருப்பதால், யதாசக்தி கர்மனுஷ்டாங்களை அனுஷ்டித்து ஒரு தகுந்த ஆசார்யன் மூலமாய் ஆத்மபர ஸமர்ப்பணம் செய்ய விழையும்போது சரமஶ்லோகம் உபதேசிக்கப்படுகின்றது. சரம ஶ்லோகமும் தாய் போன்ற கருணையுடன் நமக்கு சிபாரிசு செய்து எம்பெருமானின் மோக்ஷ பதவிக்கு மார்க்கம் ஆகிறது.

எம்பெருமான் இந்த அநுஷ்டான மார்க்கங்களை தானே அநுஷ்டித்துக் காட்டுகின்றான். அவதரித்து தாய் தேவகிக்கு காயத்ரி பட்டத்தையளிக்கிறான். வளர்க்கும் யசோதைக்கு அஷ்டாக்ஷரம் பட்டத்தையளிக்கிறான். இவ்வாறாக காயத்ரி மற்றும் அஷ்டாக்ஷர மந்த்ரங்களின் பெருமையை காட்டுகிறான். ;பிறகு வேதம் உபநிஷத்துகளின் சாரமான கீதையை, சரமஶ்லோகமாய் அருளுகிறான்.

யமுனை நதியில் தனது திருமேனி ஸப்ரஶம் கொடுத்து விரஜாநதிக்கு சமமாக ஆக்குகிறான்.

இப்படியாக தாயின் கருணையுடன் அங்கீகரிக்கப்பட்டவனாய், அதாவது காயத்ரி முதலான மந்த்ரங்களின் அனுக்ரஹத்தால், கர்மாநுஷ்டான பக்தியோக ப்ரபத்தியோகத்தை அநுஷ்டித்தவனாய் தூய்மையான யமுனை எனும் விரஜா நதியில் நீராடி தனது ப்ரக்ருதி ஸம்பந்தமான ப்ராக்ருத சரீரத்தை விட்டவனாய் (உலக இன்பங்களில் பற்றற்றவனாய்) அப்ராக்ருத சரீரத்தையடைந்து (ஸுக துக்கம் நிறைந்த ப்ரக்ருதி ஸம்பந்தமில்லாமல்) செய்த , செய்யப்படுகின்ற, செய்யப்போகும் அனைத்து பாபங்களிலிருந்தும் விடுபட்டவனாய், அப்பாபங்களை தீயினில் இட்ட தூசு போன்றும் செய்யும் என்னை (எம்பெருமானை) அடையக் கடவன்.

இப்படியான ஶாஸ்த்ரோத்க்ருதமான ஸ்வாபதேசம் இன்று கிடைக்கப்பெற்று அனைத்து பாபங்களில் இருந்தும் விடுபட்டு எம்பெருமானின் கருணைக்கு இலக்காகும்படி செய்துள்ளார் ஸ்ரீ உருப்பட்டூர் ஸௌந்தரராஜாசார்யர் ஸ்வாமி.

தாஸன், புலிக்குன்றம் வங்கீபுரம் ஜகந்நாதன்.